சுருக்கம்

பணியமைப்பு - நீர்வளத்துறை - தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி - கருணை அடிப்படையில் பணிநியமனம் – திருமதி து.கோட்டீஸ்வரி, க/பெ.காலஞ்சென்ற திரு. ஆ.துளசிராமன் - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நீர்வள(பி1)த் துறை

அரசாணை (3ப) எண்.17

நாள் : 29.03.2023
சுபகிருது, பங்குனி – 15,
திருவள்ளுவர் ஆண்டு, 2054

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 23.01.2020.
2. தலைமைப் பொறியாளர், நீர்வளத்துறை, சென்னை மண்டலம், சென்னை அவர்களின் கடிதம் எண். இ1(1)/7397/2021, நாள் 18.10.2021 மற்றும் 02.01.2023.

-----

ஆணை:-

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், திருவண்ணாமலை பெண்ணையாறு வடிநில வட்டத்தின் கீழ் உள்ள விழுப்புரம் கீழ்பெண்ணையாறு வடிநில கோட்ட அலுவலகத்தில் இளம் பொறியாளராகப் பணிபுரிந்து வந்த திரு. ஆ.துளசிராமன், 17.06.2017 அன்று காலமானதை அடுத்து, அவரது மனைவியான திருமதி து.கோட்டீஸ்வரி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் விழுப்புரம் கீழ்பெண்ணையாறு வடிநில கோட்ட அலுவலகத்தில் 08.06.2020 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்று தெரிவித்து, தனியரின் பணியினை அவர் பணியேற்ற நாளான 08.06.2020 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி உரிய அரசாணையினை வழங்குமாறு தலைமைப் பொறியாளர், நீர்வளத்துறை, சென்னை மண்டலம், சென்னை அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. தலைமைப் பொறியாளர், நீர்வளத்துறை, சென்னை மண்டலம், சென்னை அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு கூர்ந்தாய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும், திருமதி து.கோட்டீஸ்வரி

பூர்த்தி செய்துள்ள நிலையில், அவரது பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், நீர்வளத்துறையில் கருணை அடிப்படையில், இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்பட்ட நாளான 08.06.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணி வரன்முறை செய்வதால் தனியர் ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அ.சா.எண்.1610/ட்டி.1/2023, நாள். 07.03.2023 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அ.சா. எண்.4289672/ஜி1/2023, நாள். 20.03.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தீப் சக்சேனா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

<u>பெறுநர்</u>:-

தலைமைப் பொறியாளர், நீர்வளத்துறை, சென்னை மண்டலம், சென்னை - 5.
திருமதி து.கோட்டீஸ்வரி, இளநிலை உதவியாளர்.
(தலைமைப் பொறியாளர், நீர்வளத்துறை,
சென்னை மண்டலம், சென்னை-5 வழியாக)

<u>நகல்</u>:-

மாநில கணக்காயர், சென்னை - 18.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை - 9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை - 9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

30/3/2023
பா. இரமேஷ்
அரசு சார்புச் செயலாளர்
30/03/2023